செ.வெ.எண்.35 நாள்.27.06.2020

<u>பத்திரிகை செய்தி</u>

# கடலூர் மாவட்டத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் 2019-20-ம் ஆண்டிற்கு 115 பயனாளிகளுக்கு இருசக்கர வாகன மானியத்தொகையினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் வழங்கினார்.

-------

கடலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் 2019-20-ம் ஆண்டிற்கு 115 பயனாளிகளுக்கு இருசக்கர வாகன மானியத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் வழங்கினார்.

கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் 2019-2020-ம் ஆண்டிற்கு இலக்கீடு 322 ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டதில் 125 பயனாளிகளிடமிருந்து மானியம் அனுமதிக்கக்கோரி விண்ணப்பங்கள் வர்பெற்றது. அதில் 115 பயனாளிகளுக்கு இருசக்கர வாகன மானியத்தொகை விடுவித்திடும் அனுமதி ஆணை வரப்பெற்றுள்ளது.

இருசக்கர வாகனம் அனுமதிக்கப்பட்ட 115 பயனாளிகளுக்கான மானியத்தொகை ரூ.28.75 இலட்சம் ஆகும். ஒரு பயனாளிக்கு அனுமதிக்கப்படும் தொகை ரூ.25 ஆயிரம் ஆகும். இத்தொகை வாகன பட்டியலின் தொகையில் 50 சதவிகித விழுக்காடு தொகையில் எவ்வளவு வரப்பெறுகிறதோ, அத்தொகையில் அரசு மானியமாக ரூ.25 ஆயிரம் மட்டும் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் தொகை பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு ஈ.சி.எஸ் மூலம் வரவு வைக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் திரு.ராஜகோபால் சுங்கரா,இ.ஆ.ப., கடலூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.தெய்வபக்கிரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.